விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–11.38 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –11.54 a.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.No.100/2024**

**Prosecution side witness : அ.சா.8** **Date :** 21.03.2025

| | |
|---|---|
| **Name : ஸ்வர்னலட்சுமி** | **Taluk : சேலம்** |
| **Husband Name : சுப்பையா** | **Calling : மருத்துவர்** |
| **Village : சேலம்** | **Age : 43** |

(A present. )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஓமலூர் அரசு மருத்துவமனையில் முதுநிலை உதவி மருத்துவராக பணிபுரிகிறேன். நான் 15.02.2023 ம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனையில் பணியில் இருந்தபோது மாலை 03.10 மணிக்கு சேட்டு என்பவர் தன்னை 4 அடையாளம் தெரிந்த நபர்கள் கல், கை மற்றும் வளையல்களால் மதியம் 12.00 மணிக்கு சீரங்கனூரில் இருக்கும் தன்னுடைய வீட்டில் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்தபோது அவர் சுய நினைவுடன் இருந்தார். அவருடைய ரத்தம் அழுத்தமும் நாடி துடிப்பும் சீராக இருந்தது. அவருடைய காயங்களின் விவரம்

1) 3X 1 X 1 c.m. கீழிந்த காயம், முன்பக்க மண்டைஓட்டின் நடுவில் காணப்பட்டது. CT Scan (Brain) எடுத்து பார்த்ததில் அவருடைய மண்டை ஓட்டின் முன் பகுதியில் சிறிய எலும்பு முறிவு காணப்பட்டது. அந்த காயமானது சிவப்பு ஒழுங்கற்ற நிலையில் இருந்தது. (Blunt object ஆனால்

தாக்கியிருந்தால் இம்மாதிரியான காயங்கள் ஏற்படக்கூடும்) **(சேட்டுவின் விபத்து பதிவேடு நகல் மற்றும் காயச்சான்றிதழ் அ.த.சா.ஆ.2 மற்றும் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

அவருக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயம் என சான்று அளித்துள்ளேன். அவரை நான் உள்நோயாளியாக அனுமதித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் போலீசார் விசாரணையில் இந்த காயம்பட்ட நபருக்கு இடது பக்கம் நெற்றியில் ரத்த காயத்துடன் வந்தார் என்றும் அவருக்கு சிகிச்சை செய்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. CT Scan (Brain) சம்மந்தமாக அறிக்கையை காவல் துறையினர் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைக்கவில்லை. என்னிடம் கேட்கவில்லை என்றால் சரிதான். அவருக்கு ஏற்பட்ட 3X 1 X 1 c.m. கிழிந்த காயம் கல்லின் மீது கீழே விழுந்தால் கூட ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது. கையில் போடும் காப்பு வைத்து அடித்தால் மேற்கண்ட காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. அடிக்கும் வேகத்தை பொறுத்து மேற்கண்ட காயம் ஏற்படும். எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் IP Summary பார்த்து தான் சொல்ல முடியும். அடிப்பட்ட நபரை என்றும் மருத்துவமனையில் அனுப்பினோம் என்றும் தெரியுமா என்றால் IP Summary பார்த்து தான் சொல்ல முடியும். அடிப்பட்ட நபர் மருத்துவமனைக்கு வரும்போது அதிக மதுபோதையில் இருந்தார் என்றால் இல்லை.

**<u>விசாரணை முடிக்கப்பட்டது.</u>**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**